# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,936/5 — 1970 දෙසැම්බර් 18 වැනි සිකුරාදා — 1970.12.18

14,936/5 ம இலக்கம்—1970 ம ஆண்டு திசெம்பர் மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ம. தே. அ. எண் : சி. 161/49*

*1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளைகளின் 50 ஆம் பிரிவின்படி, அமைச்சர் சபை அலுவல்கள் பணிப்பாளராகிய திருவாளர் எம். எஸ். ஆலிவ் அவர்களை, தமது கடமைகளுடன் 1970 திசெம்பர் 15 ஆம் திகதியிலிருந்து அமைச்சர் சபைச் செயலாளராகவும் மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அதி உத்தமமனுரின் ஆணைப்படி,*

*டி. ஜி. தயாரத்ன,*
*மகாதேசாதிபதியின் செயலாளர்.*

*மகாதேசாதிபதியின் அலுவலகம்,*
*கொழும்பு, 1970 திசெம்பர் 15.*

*12-975*

*ம. தே. அ. எண் : சி. 162/49 (9)*

*1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளைகளின் 51 ஆம் பிரிவின்படி, நீதி அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளராகிய திருவாளர் எஸ். கனகராயர் அவர்களை, நீதி அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் நிஹால் ஜயவிக்கிரம அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1970 திசெம்பர் 12 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் நீதி அமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளராக கடமையாற்றும்படி மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அதி உத்தமமனுரின் கட்டளைப்படி,*

*டி. ஜி. தயாரத்ன,*
*மகாதேசாதிபதியின் செயலாளர்.*

*மகாதேசாதிபதியின் அலுவலகம்,*
*கொழும்பு. 1970 திசெம்பர் 15.*

*12-976*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.